பெறுகை அறிவித்தல்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

காலி மீன்பிடித் துறைமுகத்தில் தற்போதுள்ள சரிவுப்பாதையை (Slipway) புனரமைத்தல், புதிய துறைமுக மேடைச் சுவரின் (Quay-Wall) சேதமடைந்த பகுதிகளை மீள்நிர்மாணித்தல் மற்றும் சேதமடைந்த மூடு பலகைகளை (Cover Slabs) பிரதியீடு செய்தல்

ஒப்பந்த இலக்கம்: CFHC/PD/RDQWSW/GAL/2026-113

1. "இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்" சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவரால் மேற்கூறிய வேலைகளுக்கு தகுதியான மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இந்த வேலைகளில் தற்போதுள்ள சரிவுப்பாதையைப் புனரமைத்தல், புதிய துறைமுக மேடைச் சுவரின் சேதமடைந்த பகுதியை மீள நிர்மாணித்தல் மற்றும் சேதமடைந்த மூடு பலகைகளை பிரதியீடு செய்தல் ஆகியவை அடங்கும். கேள்வி கோருதல் தேசிய போட்டி ரீதியில் மேற்கொள்ளப்படும்.

2. தேவையான CIDA பதிவு

   தரம் : கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் போது C6 அல்லது அதற்கு மேல்

   விசேடத்துவம் : கடல்சார் நிர்மாணம்

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2026.11.04ஆம் திகதி முதல் 2026.11.25ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் 8,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி ''பெறுகை முகாமையாளர், இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15" என்ற முகவரிக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துமூல கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விப்பத்திரத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2026.11.26ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்குத் திறக்கப்படும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.cfhc.gov.lk இன் Procurement Tab என்பதன் கீழ்) மற்றும் www.promise.lk ஊடாக முழுமையான தகவல்களைப் (Invitation for Bids-IFB) பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்வி முன்னோடிக் கூட்டம் 2026.11.13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு 15, இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும்.

6. மேலதிக தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு தயவுசெய்து பதில் முகாமையாளரை (பெறுகை) தொலைபேசி இலக்கம் (011-2525063) ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
திணைக்கள பெறுகைக் குழு,
பெறுகைப் பிரிவு,
இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15